மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மக்கள் தொகை கணக்கெடுப்புத் துறை கண்காணிப்பாளரிடமிருந்துகடைசிப்புள்ளி விவரங்கள் எதிர்பார்க்கபடுகிறது. திருப்பூர் நகராட்சியை தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பைப் பற்றி சில நகராட்சிகளை மீண்டும் வகைப்பாடு செய்வதற்கான அடங்கல் செயற்குறிப்புகளுடன் சேர்ந்து ஆய்வு செய்யப்படும்.

திரு. நா. காசிராமன் : ஃபர்ஸ்ட் கிரேட் முனிசிப்பாலிட்டியாக இருப்பதை செலக்ஷன் க்ரேட் முனிசிபாலிட்டியாக ஆக்கவேண்டுமென்றால் அந்த முனிசிப்பாலிட்டிக்கு என்னென்ன க்வாலிபிகேஷன்ஸ், தகுதிகள் வேண்டும் என்பதை தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஒரு லட்சம் ரூபாய் முதல் 2½ லட்சம் ரூபாய் வரையில் உள்ளதும் தனி நபர் வருமானம் இருபதுக்கு மேற்படுகிற வருமானம் உள்ள நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாக வகைப்பாடு செய்யப்படும்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : நகராட்சிகளின் தரத்தை உயர்த்துவது ஜனத்தொகை அடிப்படையில் என்றால் 1966-ம் ஆண்டு சென்ஸஸ்படி உயர்த்தப்படுமா ? அல்லது இப்போதைய ஜனத்தொகைப்படி உயர்த்தப்படுமா ? இப்போதுள்ள ஜனத்தொகைப்படி ஆரணி நகரமன்றத்தில் தரம் உயர்த்தப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மக்கள் தொகைபற்றி மக்கள் தொகை கணக்கெடுப்புத் துறை கண்காணிப்பாளரிடமிருந்து தகவல் எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அடிப்படையில் உயர்த்தும் முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : திருப்பூரைப் போன்று கோவை மாவட்டத்தில் ஈரோடும் ஒரு பெரிய நகரமாக இருந்து வருகிறது, வளர்ந்து வருகிறது. அதையும் செலக்ஷன் கிரேட் முனிஸிபாலிட்டியாக்க ஏதாவது திட்டமுண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் அந்தக் கணக்கெடுப்புகள் எல்லாம் நம் கைக்கு வந்த பிறகு ஈரோடும் அதில் அடங்குமானால் அதுபற்றியும் பரிசீலிக்கப்படும்.

திரு. சு. துரைசாமி: அமைச்சர் அவர்கள் மக்கள் தொகை, வருமானம் என்ற இரண்டு முறைகளைப் பற்றித் தெரிவித்தார்கள். இந்த இரண்டு முறையும் திருப்பூர் நகரமன்றத்திற்குப் பொருத்தமாகயிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மக்கள் தொகை குறித்த கடைசிப் புள்ளி விவரங்கள் மக்கள் தொகை கணக்கெடுப்புத் துறை கண்காணிப்பாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

Nutrition Programme

*** 321 *Q*.—THIRU K. S. KOTHANDARAMIAH :** Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the "Applied Nutrition Programme' has been introduced in our State;

(*b*) if so, the places where they are introduced ; and

(*c*) the details thereof ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) ஊட்டச் சத்துணவுத் திட்டம், முதன் முதலில் 1962–63-ம் ஆண்டில் ஆரணி (வட ஆர்க்காடு மாவட்டம்), பவானிசாகர் (கோயம்புத்தூர் மாவட்டம்), கிருஷ்ணகிரி (தருமபுரி மாவட்டம்), கோவில்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்), பட்டுக்கோட்டை, திருவிடைமருதூர் (தஞ்சாவூர் மாவட்டம்), தெ. கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்) ஆகிய இடங்களில் கொண்டுவரப்பட்டது. பின்னர் 1966–67-ம் ஆண்டில் இத்திட்டம் ஆத்தூர்-1, பூவிருந்தவல்லி ஆகிய வளர்ச்சி வட்டாரங்களுக்கும், 1967–68-ம் ஆண்டில் சாத்தூர், அகஸ்தீஸ்வரம், பெரியநாயக்கன் பாளையம் ஆகிய வளர்ச்சி வட்டாரங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது.

(உ) விவரங்கள் கொண்ட தனிக்குறிப்பு* ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, will the Hon. Minister for Local Administration be pleased to extend the scheme to the Dharmapuri district also ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அத்தகைய தகவல்கள் இப்பொழுது எதுவுமில்லை.

வேதாரண்யத்தை அடுத்துள்ள தோப்புத்துறை துறைமுகம்.

*322 வினா—**திரு. ந. தருமலிங்கம்** : மாண்புமிகு தொழிலாளர்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்த தோப்புத்துறை துறைமுகத்தை செப்பனிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு உண்டா ?

(இ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) அவ்விதமான செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

ஆசிரியர்களுக்கு வீடுகள்

*323 வினா—**திரு. கரு. சிமைச்சாமி** : மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை போன்ற பெரிய நகரங்களில் ஆசிரியர்களுக்கென தமிழ் நாட்டு வீட்டு வசதி யூனிட் மூலம் வாடகைக்கு விடும் திட்டத்தின் கீழ் அல்லது தவணை முறையில் செலுத்தும் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் என்றால் எப்போது முதல் அமல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. கரு. சிமைச்சாமி : சார், மதுரை போன்ற பெரிய நகரங்களில் ஆசிரியர்களுக்கு ஒரு வசதி செய்து கொடுக்கும் முறையில் இனிமேலாவது இம்மாதிரியான ஒரு திட்டத்தை பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : ஹவுஸிங் யூனிட்டில் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு 10 சதவிதம் வாடகை வீதத்தில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. அது மாத்திரமல்லாமல் 500 ரூபாய்க்கு

* 618—622-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.